செ.வெ.எண். 6 நாள். 8.11.2011

**நாமக்கல் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் (தெற்கு) நடைபெற்ற உலக சிக்கன நாள் விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் சிக்கனமும், சேமிப்பும் என்ற தலைப்பில் மாவட்ட அளவில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கிடையே நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, நாடகப்போட்டி மற்றும் நடனப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.**

உலக சிக்கன நாள் விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது: உலக சிக்கன நாள் கொண்டாடப்படுவதின் நோக்கம் சிக்கனப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகத்தான். சிக்கனப் பழக்கம் எப்போது வருகிறதோ அப்போதுதான் சேமிப்பு வரும். மாணவ மாணவியர்கள் தங்களால் முடிந்த அளவு சேமிக்க வேண்டும். கவர்ச்சிகரமான அதிக வட்டி என ஆசை காட்டி மோசம் செய்யும் நிதி நிறுவனங்களில் நிறைய பொதுமக்கள் மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்கள் முதலீடு செய்து ஏமார்ந்துள்ளார்கள். மேலும் அவர்கள் வழக்கிற்காக நீதிமன்றங்களுக்குச் செல்லும் நிலையும் உள்ளது. எனவே பொதுமக்கள் தபால் நிலையங்கள் மற்றும் வணிக வங்கிகளில் தங்கள் பணத்தை சேமிக்க வேண்டும்.

உலகப் பொருளாதார நெருக்கடியில் பல்வேறு நாடுகளில் தொழில்துறை நசிந்து, வேலை இழப்பு மற்றும் வேலையில்லா நிலை ஏற்பட்டு அந்நாடுகளில் பொருளாதாரம் சீர்குலைந்து வருகிறது. அமெரிக்காவில் வங்கிகள் திவால் ஆகியுள்ளது. இந்தியாவில் இத்தகைய நிலை இல்லை. இந்தியாவில் சிக்கனப் பழக்கமும், சேமிப்பும் இருப்பதால் இந்தியா பொருளாதார வளர்ச்சியில் சிறந்து விளங்குகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் 1039 நபர்கள் சிறுசேமிப்பு முகவர்களாக செயல்பட்டு வருகிறார்கள். 2011 – 12-ம் ஆண்டில் அக்டோபர் மாதம் வரை ரூ.139.44 கோடி பல்வேறு திட்டங்களின்கீழ் சிறு சேமிப்பாக வசூல் செய்யப்பட்டுள்ளது. சிறுசேமிப்பு முகவர்கள் சிறப்பாக செயல்பட்டு அடுத்த நிதியாண்டில் 30 சதவீதம் கூடுதலாக சிறுசேமிப்பு வசூலை பெற்று தந்திட வேண்டும். பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் தங்களால் முடிந்து அளவு சேமித்து இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிட வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

விழாவில் மாவட்ட அளவில் பள்ளி மாணவ, மாணவியர்களிடையே "சிக்கனமும் சேமிப்பும்" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, நாடகப்போட்டி, நடனப்போட்டிகளில் வெற்றி பெற்ற 37 மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

விழாவில் முதன்மை கல்வி அலுவலர் (பொ) திருமதி.பி.பத்மாவதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) (பொ) திருமதி.எஸ்.செண்பகசெல்வி, நாமக்கல் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி (தெற்கு) தலைமையாசிரியர் திரு.என்.கே.துரைச்சாமி, சிறுசேமிப்பு முகவர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.